[1st April 1963

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காடு மாவட்டத்தில் மணிலாக் கொட்டை சம்பந்தமாக தீவிர சாகுபடித் திட்டம் கொண்டு வருவதற்கு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள். மணிலா, கரும்பு போன்ற பல பயிர்களையும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கே? தஞ்சாவூர் ஜில்லாவிலா ? தஞ்சாவூர் ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு குறிப்பாக 9 பயிர்கள், அதாவது 'பனுை, ஷுகர் கேன், கோகநட், கிரௌண்டுநட், இர்ரிகேடட் மில்லட்ஸ், வெஜி டபில், காட்டன், டுபாகோ' ஆகியவை நெல்லோடு சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட ஆற்காடு ஜில்லாவைப் பற்றி அந்த மாதிரி என்னிடம் தகவல் இல்லை.

திரு. கோ. சி. மணி : தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் இருக்கிற பகுதிகளில் இடை மகசூல் செய்கிற நேரத்தில் பருத்தி உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் உதவி அளித்து, அதை ஊக்கு விக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பருத்தி, காட்டன் இதில் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 70 தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன் வரும்.

தொழிற்பேட்டை (விருத்தாசலம்)

* 479 கேள்வி.—**திரு. கே. நாராயணசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) விருத்தாசலத்தில் எவ்வளவு செலவில் தொழிற் பேட்டை அமைப்பதென்று சர்க்கார் முடிவு செய்துள்ளது ?

(இ) அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சுமார் 32,76,000 ரூபா யில்.

(இ) இந்த தொழிற்பேட்டை இந்த ஆண்டு நடுவில் ஆரம் பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Minor Ports (Development)

* 480 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Works be pleased to state the various schemes to be implemented by the Government in the Third Five-Year Plan period for developing minor ports?

THE HON. SRI V. RAMAIAH : A paper[a] is placed on the Table of the House.

---

a Printed as Appendix III on pages 485–488 infra.